Koviloor Digital Library

5/1

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

யாக்ஞ வல்கியமாம் இயக்காய வர்க்கம்

என்னும்

பண்செய் கரணம்



No.5

Acc. No. 46357

"தமிழ் வேத நாவலர்"

"வைத்தியமணி"

சற்குரு. சித. வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

தேவகோட்டை.

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

யாக்ஞ வல்கியமாம் இயக்காய வர்க்கம் என்னும் பண்செய் கரணம்

இந்நூலாசிரியர்
"தமிழ் வேத நாவலர்"
முத்தமிழ் வேதத் திருச்சபை
சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை
தேவகோட்டை.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46357

இஃது
தேவகோட்டை திரு. **பி. சு. இசக்கியப்பன்** அவர்கள்
தேவகோட்டை திரு. **இராம. ஆதிரெத்தினம்** அவர்கள்
ஆர்வத்திலுைம் திருஅருள் சம்மதத்திலுைம்
தேவகோட்டை
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது.

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி
வ.பெரி.மு. தெரு, தேவகோட்டை - 630 302.

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

முதற்பதிப்பு : சித்ரபானு ஆண்டு ஆவணித்திங்கள் 4
20-08-2002

விலை : ரூ. 5/- (ரூ)

பதிப்புரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர்
தேவகோட்டை

கிடைக்குமிடம் : Dr. SV. முருகேஷ் R.I.M.P. A.M.I.H.
முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர்
சித்த மருத்துவம்
கிணற்றுநீர் நிபுணர்
புதுக்கோட்டை

நலந்தா புத்தகக் கடை
வடக்கு வல்லம்பர் தெரு
காரைக்குடி - 630 001.
போன் : 434807

இராம. ஆதிரெத்தினம்
இணைச் செயலாளர்
முத்தமிழ் வேதத் திருச்சபை
19, ரெகுநாதபுரம் மேற்கு
தேவகோட்டை - 630 302.
போன் : 370113

கணினி & அச்சு அமைப்பு : **ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்**
பஸ் ஸ்டாண்டு தெரு
SBI எதிரில்
தேவகோட்டை - 630 302.
போன் : 373347
email : swamirajbal@hotmail.com

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நூலின் முன்னுரை

எம் ஞானத்தெளிவு குரு திருவடி என்உச்சி மேற்கொண்டு யாக்ஞ வல்கியமாம் இயக்காய வர்க்கம் என்னும் பண்செய் கரணம் நூலிற்கு முன்னுரை எழுதுவோமாக.

சொற்றுணையாம் எழுதா கேள்வி வகுத்துணர இந்நூல் மிகவும் இன்றியமையாதது, நம்பிண்டத்தில் ஞானசிரியன் உணர்த்தியபடி வெளிவளி ஒலி யுண்டாகும் சாதனம் செய்ய அந்த சாதனம் சிக்கலின்றி பலிதமாகும் பொழுது தசவித நாதங்கள் தோன்றும். அந்த நாதங்கள் தோன்றுகின்ற வாயில்கள் செவி வாய் மூக்கு கண் என்பனவாக இருக்கும். அந்த நாதத்தின் வகையை திருமூலர்

"மணிகடல் யானை வளர்குழல் மேகம்
மணிவண்டு தும்பி வளை பேரிகை யாழ்
தணிந்தெழு நாதங் கடாமிவை பத்தும்
பணிந்தவர்க் கன்றிப் பார்க்க வென்னுதே."

என்று கூறுகிருர். இவற்றை நால்வகை வாயிலினும் வகைதொகை செய்து பார்க்கும் பொழுது (௲௱அ) (1180) சாகைகளும் ஒலிக் கதிர்களில் தோன்றும்.

அதில் செவியை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை ரிக்வேதம் என்றும், வாயை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை யசூர் வேதம் என்றும், நாசியை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை சாம வேதம் என்றும், கண்களை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலியை அதவர்வண வேதம் என்றும் வகுக்கப் பெறுகிறது.

செவியை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி மேகம், கடல், பேரிகை. இவை ஒவ்வொன்றின் ஒலிக்கதிர்கள் ஏழாக இருக்கும். ஆக மூவேழு இருபத்திஒரு (உ௰க) 21 ஒலிக்கதிர்கள். இருபத்தி ஒரு சாகை ரிக்வேதம்.

வாயை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி மணியும், குழலும். இவை தாளம் (௩௰ரு) 35 ஓசை ஒன்று மேளம் (எ௰உ) 72 ஒலி ஒன்று ஆக (௱௯) 109 ஒலிக்கதிர்கள். யசூர் வேதசாகை (௱௯) 109 ஆகும்.

மூக்கை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி யானை, சங்கு, வண்டு, தும்பி இவற்றின் ஒலியாக முறையே பத்து, நூறு ஆயிரம் ஒலிக்கதிர்கள் 1000 (௲) சாகை கொண்டது சாமவேதம்.

Koviloor Digital Library

கண்களை இடமாகக் கொண்டு தோன்றும் ஒலி யாழ். அது ஏழேழ் நாற்பத்தொன்பது (சமகூ) ஏழால் ஒன்று ஆக (ருய) 50 ஆக அதர்வணச் சாகை இருக்கும். ஆக மொத்தம் 21+109+1000+50 = 1180 சாகை.

வேதபுருடனின் ஆறுஅங்க விளக்கம் (க) சித்செய் (சிட்டெ) சூக்கம் பனிரெண்டு சிரமும் (2) வியாகரணம் என்னும் மேற்கணக்கு ஒன்பதாகிய அத்தமும் (3) சந்தசு என்னும் எழுதாக்கிளவி மூன்றாகிய தோளும் (4) நிருத்தம் என்னும் ஒடுக்கம் ஐந்து ஆகிய தொடையும் (5) சோ ஓது இடம் என்னும் கீழ்கணக்கு ஒன்பதாகிய பாதமும். (6) கற்பம் என்னும் மெய்வளம் (எயஉ) எழுபத்திரண்டாகிய உடம்பும் கொண்டு ஒலி உருவாகிய வேதம் ஒரு புருஷாகிருதியாக நிற்கும். அவ்வாறு நிற்கப் பெறும் உருவிற்கு கருவாக விளங்குவது துவித சித்தாந்த சுருதி வடிவாம் பீடமுமாக நிற்கும் பிரணவமாம்.

உடம்பின் உறுப்புக்கள் (டுயஉ) 32 ஆக இருக்கும் பொழுது வேத அங்கம் மட்டும் (சா) 6 ஆக அமைவது எனெனில் வேதம் ஒலியை உடம்பாக கொண்டது. அவ்வொலியானது வளியால் வெளியில் உலவும் தன்மையைப்பெற்று உடம்பை உடையதாகிறது. அந்த ஒலியும் வளியும் செயல்படும் நிலயம் கொண்ட பெரும் நாடி சிரம். அத்தம் (கை). தோள். தொடை. பாதம் இவை பொருந்திய உடலாக அமைந்திருக்கிறது. ஆக இறைவன் நம்மை அனைத்து ஒலியையும் ஒலிக்கும் நிறைவு கொண்டவனாக படைத்திருக்கிறார். அந்த எழுதா கேள்வியை உய்த்துணர பண்ணிலக்கணச் சூக்கமும், பண்செய் கரணமும் ஆகிய இரண்டு நூல்களும் இரண்டு கண்கள் ஆகும்.

பண்ணிலக்கணச் சூக்கம் ஏற்கனவே முத்தமிழ் வேதத் திருச்சபை மூலம் வெளிவந்திருக்கிறது. யாக்ஞவல்கியமாம் இயக்காயவர்க்கம் என்னும் பண்செய்கரணம் 25 (இருபத்தைந்தாம்) ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வெளியிட எம் ஞானத் தெளிவு குருவின் உள்ளம் இசைந்திருக்கிறது. அதன்படி இந்நூலை 20-8-2002 ஆவணி மாதம் 4ஆம் தேதி வெளியிடுகிறோம்.

இசையின் உருவமதை கொண்டுள்ளதால் இயக்காயவர்க்கம் என்னும் பெயர்பெற்று விளங்குகிறோம் நாம் என்பதை புரிந்து கொள்ளுவதற்கு இந்நூல் வேண்டும். ஒலி ஒரு உடம்பாகி அந்த உடம்பிற்குள் புரியட்ட காயமாகிய சத்த ஸ்பரிச, ரூப, ரசகந்தம் புத்தி மனவாங்காரமாகப் பகுத்துப் பார்த்து இயக்காய வர்க்க மாக உணர இந்நூல் தான் வேண்டும். முப்பத்திரண்டு உறுப்பிற்கும் 32 திறம் கண்டு உணர வேண்டும்.

Koviloor Digital Library

இந்த கலியுகத்தில் வேதத்தை ஓதி உணர நாம் வீடுபேறடைய இந்நூல் அவசியம்.

சேடக் கலியதன் தீங்கறவும், ஞானத் தெளிவு குருவின் நல்ஆசி இசக்கியப்பன், ஆதிரெத்தினத்திற்கு கூட்டுவிக்க இந்நூலை வெளியிட்டு அகமகிழ்கிறோம். இந்நூலை பதிப்பித்த ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் திரு. சுவாமிநாதன் அவர்கள் குடும்பத்தார்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கு தொண்டு செய்ய இறைவன் திருஅருள் புரிய வேணுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

இந்நூலை வாசிக்க வாசிக்க இன்பம் பெருகும் அமைதி கிடைக்கும். முடிவிலா மோனநிலையை அடையலாம். சோராத சுகம் அறியலாம் என எழுதி நிறைவு செய்கின்றோம்.

முத்தமிழ் வேதத்திருச்சபை வாழ்த்து

சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளிக் காட்டுமிந்த கருத்தைவிட்டு
பொய்தந்துழலும் சமயநெறி புகுதல் வேண்டாம் முத்திதரும்
தெய்வசபையை காண்பதற்கு சேரவாரும் செகத்தீரே.

இவண்

இராம. ஆதிரெத்தினம்

இணைச்செயலாளர்

முத்தமிழ் வேதத் திருச்சபை

Koviloor Digital Library

உ
சிவமயம்



"தமிழ் வேத நாவலர்"
"வைத்தியமணி"

சற்குரு. சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை
தேவகோட்டை

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

யாக்ஞ வல்கியமாம் இயக்காய வர்க்கம் என்னும் பண்செய் கரணம்

காப்பு

ஆனைமுக முக்கண் அந்திப் பிறைமவுலி
தானை மருப்பங்கு சம்பாசம் - ஏனையகை
மாங்கனியை ஏந்த நுகர்வாகாம் பெருவயிரஃ
தோங்கிறைனய நாம்வணங் குவோம்.

இயக்காய வர்க்கத்தை யாக்ஞவர்கர்
என்னுமுனி வரனென்ன அவினயனர்சொல்
மயக்காய மொழிகண்டும் மறைநூல் சொல்ல
வாகாகும் பண்செய்யும்கரணமாகச்
செயக்காய வுருவொலியில் நிலவப்பாவேய்
சீர்திறம் எண்ணுன் குறுப்பா யமையவவ்வ
வயக்காயந் தொகைப்படுத்தி சொன்னேமின்னூல்
வல்லார்கள் மறைவல்லார் வையகத்தே (க)

வையகத்திற் சொற்றுணையாம் எழுதாக்கேள்வி
வகுத்துணர வின்னூல்தான் வேண்டும் வேண்டும்
வையகத்தி லுள்ள நெல்லின் கனியே போலக்
காட்டிடு மின்னூல் வேதவேள்வி தன்னை
பொய்யகற்றி நின்றபுல வோர்கள் காண்பார்
பொற்பூவும் வாசனையும் போலவாகும்
மையகற்றித் திருமுறையாம் பெருநூலிற்குள்
மறைதோன்றும் உரைவளத்தை வழங்கினேமே. (உ)

வழங்கிய தெவ்வாறென்ற மார்க்கந் தன்னை
வகுத்துக் காட்டியக் காயவர்க்க மின்னூல்
பழங்கிழமை படைத்த பண்செய் கரணந் தன்னில்
பாலையேழ் ஐந்திணையும் யாழ்ஓர் நான்காய்
முழங்கிவளர் வகையெல்லாம் கரிசறுத்து
மொழியு முடற்சக்கரமும் அமரம் பூர்வம்
புழங்கிடையாஞ் சக்கரமும் அமிர்தம் நஞ்சு
பொருந்து திதிமாறுதலும் புகன்றிட் டோமே. (ங)

புகலும் சதுர்மறையைம் பொற்பாம் தமிழே
அகலு மொழிக்கஃ தமையா - திகலுமென
ஞான சம்பந்தருரை நான்மறையை நன்குணர
மோனசம் பந்தமுரைத்தோம். (ச)

Koviloor Digital Library

திருநீல கண்டயாழ்ப் பாணர் மரபிற் சிறந்தநலந்
தருசீவ வல்லியாற் றில்லை நடராஜர் சந்நிதிமுன்
றிருநா ரையுர்நம் பியும பயகுல சேகரனும்
கருவாகக் கண்டது தேவாரப் பண்முறைக் கட்டளையே. (௧)

கட்டளை யொவ்வொரு பண்ணிற்கு மித்தனை காண்மினென
அட்டவணை கொண்டுரைத்த திருந்த ததன் விபரந்
திட்டமா யின்னதெனத் தெரியா மலேசென் றனசென்
றிட்டன ஆண்டுகள் ஓராயிரத் தின்மே லின்னமுமே. (௨)

இன்னுமேற் செல்லா மலையா யிரத்தைம் பத்தீர் வருடஞ்
சென்ற கலியினிற் சேடகலி யதன்திங் கறவும்
அன்று திருமுறை கண்ட மகிபதி யாவலெலாம்
இன்று நிறைவு பெறவுஞ் சிவமய மெய்தவுமே. (௩)

எய்தத் திருவருள் கூட்டு நலத்தினு லென்முயற்சி
கைவல்லியமாக ஏழுதிருமுறைக் கட்டளைமுன்
ஐயை வகுத்த வரம்பின்படிகண் டதன்பிறகு
மெய்யாய் வியாக ரணம்பண் கொளலும் விளங்கிடவே. (௪)

விளக்கமாய்ப் பண்ணின் வியாக ரணத்தை விரித்தெழுத
அளத்தர்க் கரியபெரும்பொருள் கொண்டடங் கன்முறையாய்க்
கிளத்தருங் கேள்வி திருமுறை வைப்பிற் கிடைப்ப கண்டேன்
உளத்திறும் பூதெய்திப் பேரின்பத் துள்ளாழ்ந் துவகையுற்றே. (௫)

உற்று நுணுகியா ராய விசையினு ருவமதைப்
பெற்ற வதனு லியக்காய வர்க்கப் பெயர்படைத்த
சொற்றிறங் கண்டேன் அதனுல் மொழிந்தேன் சுருதிவழி
யிற்றிறங் கண்டுரை செய்ய வருமெழுதா மறையே. (௬)

எழுதா மறைமுன் றுவிதசித் தாந்த மிறுதியதில்
வழுவாத அத்விதசித் தாந்த நிற்க வதனிடையில்
முழுவது மானநால் வேதவே தாந்த முழங்கி நிற்க
நழுவா மலேயோம் நமசி வயவோம் நலந்தரவே. (௭)

நலந்தரும் ஓங்காரங் காப்பாகத் தோன்றிய நான்மறையும்
பலந்தரும் ஓங்காரத் துள்ளா யடங்கிப் பதிவுபெற
வலந்தரும் நான்குப வேதமா றங்கமும் மற்றுமதில்
அலந்தரு சாகைகள் நூற்றெண் பதோடுமொ ராயிரமே. (௮)

Koviloor Digital Library

ஆயிர மானதிற் பாகைகளா னங்கன்ம மர்த்தமென
வாயின மூன்று புருடார்த் தநான்கு மமிதமதி
னூயிற தென்னப் பகாவூ விதமொழி நாலிரண்ட
தாயின அத்துவா வெல்லாமுந் தோன்றி யமைவுறுமே. (௯)

அமைவுற நான்கண்ட வாறு மறையுணர் வார்களுங்கண்
டமைவுறப் போதாந்த மாமேற் கணக்கை யளவிடுதற்
கமைவுறப் பண்ணி னியக்காய வர்க்கமதை வகுத்திங்
கமைவுறக் காட்டுதுங் காண்க மறைதே றறிஞர்களே. (௰)

அறிஞ ருணர்கலை நீளா தமைதலி னுன்மருதம்
குறியஃ துடைத்தாய் வரையறை கொள்ளல் குறிஞ்சியது
நெறியி னெருபா லியையவது பாலை நேயமொடு
முறிவு கொளாதுறல் நெய்தன்முன் னுமெல்லை முல்லையதே. (௧௧)

முல்லையொ டைந்தாமிது நாசிகண்வாய் முழுவுடலம்
வல்ல செவியிவை தன்னிலியங் தோன்ற வாசிநடை
செல்லு மியற்கைக் குறிப்பின மைத்தசொற் றேருமியாழ்
எல்லையி தனிலியக் காய வர்க்க மியம்புதுமே. (௧௨)

இயம்பு மியாழிணைப் பற்றி முடியுச்சி லாடநுதல்
மயங்கு மெய்கண்மூக்கு கர்ணங்கன் னம்மிதழ் வாலெயிறு
இயங்கு மெய் மோவாய் கழுத்து முதுகினி யையுமையம்
அயங்குமை தண்டு நடுநெஞ் சகடி தலையிடையே. (௧௩)

இடையிற் குறிகுதமுந் தோள்குடங் கையுள்ளென் கைவிரல்
கடங்கை பிருட்டம் தொடை கணைக்கால்விரல் காலடியும்
அடங்க லிவைமுப் பதிற்றிரண் டெல்லாம் அயன்விருப்பப்
படைப்பாம் பசுவால் இயக்காய வர்க்கம் பதம்பெறுமே. (௧௪)

பதம்பெற லாவ தராகம் விளரி பதுங்குகலி
நிதமாம் படுமலைப்பாலை படுதிற நின்நைவளம்
சதமாம் திறம்பஞ் சுரமும் நவில்மருள் தற்பாடுநேர்
இதமா மால்செம்பாலை காந்தாரம் ஆசான் இயையாமையே. (௧௫)

இயையா வயிர்ப்புநேர் மைபெயல் ஊறுப்பியந்தை செம்மை
சயையரும் பாலை குறிஞ்சி யாற்றுத் திறம்சா தாரிநற்
செயைவழிப் பாலை விளரியாம் பாலைமேற் செம்பாலையும்
இயைகோடிப் பாலை யெண்ணுன்கா நிரநிறை யெண்ணுகவே. (௧௬)

Koviloor Digital Library

என்னும் பிரம ணியக்காயத் துட்கை எனுமுடுவாய்
முன்ன மதிற்சீர் எண்ணுன்கினிற் றேவர்கள் மொய்த்துநிற்க
நின்றது தேவரியக் காய மாக நெடுங் கணக்கா
மென்ற வெண்ணுன் கான வாசிக்குதிரை எழிலுருவே. (௰எ)

உருப்பெரும் பூதவியக்காய மாகுமி தோது பண்பூத்
தருமொரு பூசினை யாங்குசு மாண்டம தானமகார
அரும்பெற லான பிதுரியக் காயமி தாமமுத
மருநிலை நஞ்ச மருநிலை யாகி வலமிடமே. (௰அ)

இடம்பெற வாழ்வு தருநல் லிலாங்கனி இன்கனிமா
னிடம்என வாதல்நன் மானுட ரெக்ய மிதிற்றனைகொண்
டடங்கி நின்றுய்வுபத் தொன்றி யொன்றுதநே ரானிரையாய்
திடங்கொள மேதத் தியக்காய வர்க்கஞ் சிறந்திடுமே. (௰௯)

சிறப்பா மியக்காய வர்க்க மகம்புரி செய்கையதா
லுறற்பால நேயமா யொன்பது கோள்களு மொத்துநிற்கப்
பெறற்கரும் பேருள ராகிய வைந்து பெருந்தலைவர்
மறற்றர லின்றியோர் பாலியைபாகி வளந்தரவே. (உ௰)

தரவான பூதங்க ளைந்தும் மருளதந் தந்துநிற்க
திரமான வெண்டிக்குப் பாலகர் நற்குறிச் சீரருளக்
கரவாது பட்சிகளைந்து முன்னுமெல்லை கைவசமாய்
வரவாக இன்பம் உறுப்பியாழ் பண் திறமாய் நிற்குமே. (உ௰க)

நிற்கு முடற்சக் கரமா முறுப்பு நிலையதனை
நிற்கு முறுப்பான பாதாதி கேசமாய் நேர்படுத்த
நிற்குமொவ் வொன்றிடை யிட்டுக்கீழ் மேலாய் நெறிப்படுத்தி
நிற்கும் வகைக்கீழ் மேலாயிடைச் சக்கர நின்றிடுமே. (உ௰உ)

நின்றன தூலமுங் காரணஞ் சூக்குமம் நேர்பெறவே
யொன்ற வெழுத்துசீர் பண்திற மாகவொருங் கிணைந்து
நன்றமை வுற்றியக் காயத்திற் றத்துவ நாலெட்டுமுன்
றொன்ற வருதொண்ணூற் றுருய்த் துலங்கு முருவெடுத்தே. (உ௰ங)

உருவெடுத் தொன்றலான் மக்கள் மனித ருயர்ந்தபண்பூத்
திருவடுத் தின்பதுன் பத்தைக் கடந்து சிவமயமாம்
பருவ மடுத்தியக் காயகர்த் தாவாம் பதமடைந்து
சருவக்கு ளென்ன மறையுண்மை யோர்வர்ச ரதமிதே. (உ௰௪)

Koviloor Digital Library

பிரமஎக்யம் - முல்லை - வியாழன் - கணைக்கால் - விளரிப்பாலை - தம்பனம்
வேதஎக்யம் - குறிஞ்சி - வெள்ளி - விரல் - மேற்செம்பாலை - பூரகம்
பூதஎக்யம் - மருதம் - புதன் - தொடை - செவ்வழிப்பாலை - ரேசகம்
பிதுர்எக்யம் - பாலை - செவ்வாய் - புட்டம் - சாதாரி - கும்பகம்
மாநுடஎக்யம் - நெய்தல் - சனி - பாதம் - கோடிப்பாலை - தாரகம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOV
A. No. 46357

பண்திறம் - நடஉ - பிரமஎக்யம் - உயிர் - பசு - திறம்
நாள்மீண் (சொல்) - நடஉ - தேவஎக்யம் - மனம் - ஆடு - சீர்
பண் - நடஉ - பூதஎக்யம் - வாசி - குதிரை - எழுத்து
அமுதநிலை / விஷநிலை - நடஉ - பிதுர்எக்யம் - பூசினை - பண்பு
யோகம் - நடஉ - மானுடஎக்யம் - மனிதர் - தேங்காய் - விடம், அமிர்தம்.

பூச்சீர்	-	வெண்சீர்
கனிச்சீர்	-	கலிச்சீர்
மாச்சீர்	-	வஞ்சிச்சீர்
காய்ச்சீர்	-	இயற்சீர்
விளச்சீர்	-	ஆசிரியச் சீர்

Koviloor Digital Library

உறுப்பு	திறம்
1. முடி	அராகம்
2. உச்சி	விளரி
3. நெற்றி	குறுங்கலி
4. புருவம்	படுமலைப்பாலை
5. கண் இமை	படு திறம்
6. கண்	திறனில் திறம்
7. மூக்கு	நைவளம்
8. செவி	மெய்திறம்
9. கன்னம்	பஞ்சுரம்
10. உதடு	நவில்
11. பல்	மருள்
12. நாவு	பாடு
13. மோவாய்	நேர்தல்
14. தொண்டைக்குழி	மலை
15. பின்தாரை	செம்பாலை
16. மூக்குதண்டு	காந்தாரம்
17. நெஞ்சுக்குளி	ஆசான்
18. வயிறு	இயையாமை
19. கொப்பூள்	அயிர்ப்பு
20. இடை	நேர்மை
21. குறி	பெயல்
22. குதம்	உறுப்பு
23. புயம்	பியந்தை
24. குடங்கை	செம்மை
25. அங்கை	அரும்பாலை
26. விரல்	குறிஞ்சி
27. கடங்கை	ஆற்றுதிறம்
28. புட்டம்	சாதாரி
29. தொடை	செவ்வழிப்பாலை
30. கணைக்கால்	விளரிப்பாலை
31. கால்விரல்	மேர்செம்பாலை
32. பாதம்	கோடிபாலை

பூமே லமர்வேத ஞர்விதி தீக்கோள்கள் பூதபய
மாமேற் படுதீங்கு நின்றே யிணைந்துளந் நாளிடறும்
போமே சிவன்பேர் சிவய நமஎன வேபுகலச்
சோமேசர் சொக்கேசர் காளீசர் என்றும் துணைநிற்கவே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 46351
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

இந்நூலைப்பற்றி..............

சிவபுண்ணியசீல மெய்யன்பர்கள் அனைவருக்கும் முத்தமிழ் வேதத் திருச்சபையோரின் அன்பு வணக்கம்.

இயக்காய வர்க்கம் என்னும் இந்நூலில் இறைவன் எல்லா நாத ஒலியையும் ஒலிக்க ஓர் நிறை கொண்ட உருவத்தை படைத்தான் அது தான் இசையின் உருவமாகிய மனிதன்.

"அடங்கலும் தன்னுள் ளடக்கி அடங்கும்
இயைபுள நாதத்தியைந்து விளங்க
அமைதிரு முறையே அடங்கன் முறையாம்"

நம்முடைய 32 உறுப்புக்களிலும் வாசி நடைகொண்டு 72,000 நாடி நரம்புகளை இயக்கி வீடு பேறடைய ஆக்கிய தேவாரத்தை ஓதி சோராத சுகம் அடைய இந்நூல் வழிகாட்டும். வாசிக்க வாசிக்க நம்மை நாமே அறிந்து இனிமை பெறலாம் என எழுதி நிறைவு செய்கிரேம்.

இராம. ஆதிரெத்தினம்

இணைச் செயலாளர்

முத்தமிழ் வேதத் திருச்சபை

எமது வெளியீடுகள்

க. இராமாயண இலக்கியம் (ஞான பாகை) ரூ. 27/- (உ௭)

உ. நாதாந்தம் என்னும் பண்ணிலக்கணச் சூக்கம் (இசை இலக்கணம்) ரூ. 25/- (உ௫)

ங. கரண இலக்கணம் ரூ. 10/- (௰)

ச. சூனிய சம்பாதனை ரூ. 51/- (௫௧)